மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு அனைத்து விடுதிகளிலுமே 100 மாணவர்கள் அல்லது மாணவியர்களைச் சேர்ப்பதற்கு ஆணையிட்டுள்ளார்கள். அதுமட்டுமல்லாமல், தேவை ஏற்படுமானால் 10 சதவீதம் அதிகமான மாணவர்கள் அல்லது மாணவியர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும் ஆணையிட்டுள்ளார்கள். ஆகவே, வரும் காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போன்று, மாணவ, மாணவியர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். மேலும், இராமசாமிபட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியை ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 452, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

452—

புதிய வருவாய்க் கோட்டம்

***29695—திரு. வி. முத்துக்குமார்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, நல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய்க் கோட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி, விருத்தாசலம் தொகுதி, நல்லூர் வருவாய்க் கோட்டம், அரசாணை (நிலை) எண் 279-ன்படி, வருவாய்த் துறையால்

2013 மே 9]

நிர்ணயிக்கப்பட்ட எந்த ஒரு அளவுகோலையும் நிறைவு செய்யாத காரணத்தினால் புதிய நல்லூர் வருவாய்க் கோட்டம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 453, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

453—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***525—திரு. துரை. மணிவேல்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், எலந்தக்கூடம் மற்றும் குருவாடியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், எலந்தக்கூடம் அரசு உயர்நிலைப் பள்ளியானது அரசாணை (நிலை) எண் 120, பள்ளிக் கல்வி (மேநிக2) துறை, நாள் 8-8-2011-ன்படி 2011-2012 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், மற்றொரு பள்ளி தரமுயர்த்தப்படுவதற்குத் தேவையான பொதுமக்களுடைய பங்குத் தொகை 2 இலட்ச ரூபாய் செலுத்தப்பட்டிருக்கிறது. போதிய இடவசதியும் உள்ளது. ஆகவே, தேவை மற்றும் நிதிநிலையைக்